## பிரதமர் இந்தியா-ஓமன் பிசினஸ் ஃபோரத்தில் கலந்துகொள்கிறார் (டிசம்பர் 18, 2025)

டிசம்பர் 18, 2025

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மஸ்கட்டில் இந்தியா-ஓமன் வணிக மன்றத்தில் உரையாற்றினார். ஓமானின் வர்த்தகம், தொழில் மற்றும் முதலீட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மேன்மைமிகு கைஸ் அல் யூசெஃப்; ஓமான் வர்த்தக மற்றும் தொழில்துறை சபையின் தலைவர் மேன்மைமிகு ஷேக் ஃபைசல் அல் ராவாஸ்; இந்தியாவின் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல்; மற்றும் CII அமைப்பின் தலைவர் திரு. ராஜீவ் மேமானி ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இந்த மன்றத்தில், எரிசக்தி, விவசாயம், தளவாடங்கள், உள்கட்டமைப்பு, உற்பத்தி, சுகாதாரம், நிதிச் சேவைகள், பசுமை மேம்பாடு, கல்வி மற்றும் இணைப்பு போன்ற துறைகளில் இரு நாடுகளையும் சேர்ந்த முன்னணி வணிகப் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

2. கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர், மாண்ட்வி முதல் மஸ்கட் வரையிலான இரு நாடுகளுக்கும் இடையேயான பல நூற்றாண்டுகள் பழமையான கடல்வழி வர்த்தக உறவுகளை எடுத்துரைத்தார். இந்த உறவுகளே இன்று துடிப்பான வர்த்தகப் பரிமாற்றங்களுக்கு அடித்தளமாக அமைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார். 70 ஆண்டுகால வெளிநாட்டு உறவுகள், பல நூற்றாண்டுகளாகக் கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கை மற்றும் நட்பைக் குறிக்கின்றன என்று அவர் குறிப்பிட்டார். இந்தியா-ஓமன் விரிவான பொருளாதாரப் பங்களிப்பு ஒப்பந்தத்தை [CEPA] முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளுமாறு பிரதமர் வர்த்தகத் தலைவர்களை வலியுறுத்தினார். இந்த ஒப்பந்தத்தை அவர் இந்தியா-ஓமனின் பகிரப்பட்ட எதிர்காலத்திற்கான ஒரு செயல் திட்டம் என்று வர்ணித்தார். CEPA ஒப்பந்தம் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டு உறவுகளில் புதிய ஆற்றலைச் செலுத்தி, பரஸ்பர வளர்ச்சி, புத்தாக்கம் மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான வாய்ப்புகளை உருவாக்கும் என்று அவர் எடுத்துரைத்தார்.

3. கடந்த 11 ஆண்டுகளில் இந்தியாவின் பொருளாதார வெற்றியை எடுத்துரைத்த பிரதமர், அடுத்த தலைமுறைக்கான சீர்திருத்தங்கள், கொள்கை நிலைத்தன்மை, நல்லாட்சி மற்றும் முதலீட்டாளர்களின் உயர் நம்பிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் நாடு உலகின் 3வது பெரிய பொருளாதாரமாக மாறுவதற்கான பாதையில் சிறப்பாகச் சென்று கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார். உலகளாவிய நிச்சயமற்ற சூழலிலும், கடந்த காலாண்டில் இந்தியாவின் உயர் வளர்ச்சி விகிதம் 8% சதவீதத்திற்கும் மேல், அதன் மீள்தன்மை மற்றும் உள்ளார்ந்த பலங்களை வெளிப்படுத்துகிறது என்றும் அவர் மேலும் கூறினார். இந்தியா, மக்களின் 'வாழ்க்கை வசதி', 'வணிகம் செய்வதை எளிதாக்குதல்' ஆகியவற்றுக்காக உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்பு, தளவாடங்கள், இணைப்பு வசதிகள், நம்பகமான விநியோகச் சங்கிலிகள், உற்பத்தித் திறன்கள் மற்றும் பசுமை வளர்ச்சியை உருவாக்குவதில் வேகமாகவும் பரந்த அளவிலும் செயல்பட்டு வருகிறது என்பதை அவர் வலியுறுத்தினார்". எரிசக்தி, எண்ணெய் மற்றும் எரிவாயு, பெட்ரோ கெமிக்கல்ஸ் மற்றும் உரங்கள் போன்ற பாரம்பரியத் துறைகளுக்கு அப்பால் சிந்தித்து, பசுமை ஆற்றல், சூரிய மின்சக்தி பூங்காக்கள், ஆற்றல் சேமிப்பு, ஸ்மார்ட் கிரிட்கள், வேளாண் தொழில்நுட்பம், நிதித் தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு மற்றும் இணையப் பாதுகாப்பு ஆகிய துறைகளில் உள்ள வாய்ப்புகளை ஆராயுமாறு ஓமானிய வணிக நிறுவனங்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். வணிகப் பங்களிப்பை எதிர்காலத்திற்கு ஏற்றதாக மாற்றுவதற்காக, இந்தியா-ஓமன் வேளாண் புத்தாக்க மையம் மற்றும் இந்தியா-ஓமன் புத்தாக்கப் பாலம் ஆகியவற்றை உருவாக்குவதற்கு அவர் முன்மொழிந்தார். இவை வெறும் யோசனைகள் மட்டுமல்ல, முதலீடு செய்வதற்கும், புதுமைகளைப் புகுத்துவதற்கும், ஒன்றிணைந்து எதிர்காலத்தை உருவாக்குவதற்குமான அழைப்புகள் என்று பிரதமர் எடுத்துரைத்தார்.

4. இந்நிகழ்வில் வணிகத் தலைவர்கள் பெருமளவில் கலந்துகொண்டதைப் பிரதமர் பாராட்டினார். மேலும், அவர்கள் தொழில்முனைவை கொள்கையுடன் இணைத்து, CEPA ஒப்பந்தத்திற்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். இந்தியா மற்றும் ஓமன் ஆகியவை வெறும் நெருங்கிய அண்டை நாடுகள் மட்டுமல்லாமல், பிராந்தியத்திலும் அதற்கு அப்பாலும் நிலைத்தன்மை, வளர்ச்சி மற்றும் பகிரப்பட்ட செழிப்புக்கு உறுதியளித்த உத்திசார் கூட்டாளர்கள் என்பதை அவர்

மீண்டும் உறுதிப்படுத்தினார். பிரதமரின் முழு கருத்துக்களையும் இங்கே காணலாம் [Link].

மஸ்கட்

18 டிசம்பர் 2025